“மாலே மணி”

சந்தா விபரம்

ஆண்டுஒன்றுக்கு ரூ. 24-0-0
ஆறு மாதத்திற்கு ரூ. 12-0-0
மூன்றுமாதத்திற்கு ரூ. 6-0-0
ஒரு மாதத்திற்கு ரூ. 2-2-0
சென்னைக்குமட்டும் ரூ. 2-0-0

Regd. No. M. 5458

[illegible] ஒன்று

இலங்கை 10 சதம்

மா[illegible]மணி

(திராவிடர் தமிழ்[illegible]னசரி. கருத்திதழ்)

ஆசிரியர் : மு. கருணநிதி

“MA[illegible]
Tamil Daily

Telephone:
No. 4502.

“மாலே மணி”

விளம்பர விகிதம்

ஒரு [illegible]ம் ஒரு பத்திக்கு ரூ. 5

நீடித்த விளம்பரங்களுக்கு விண்ணப்பித்துக்கொள்ளவும்.

மானேஜர்.

மலர் 3 | சென்னை 28-11-51 புதன் ★ வெளியூர் 29-11-51 வியாழன் | மணி 109

காங்கிரஸ் இன்னும் தவறுகள் செய்யும்

வெற்றி மயக்கத்தால் தவறுகள் ஏற்படுகின்றன

பதவி வேட்டை [illegible]லமாகிவிட்டது

பண்டித நேரு[illegible] கூறுகிறார்

சென்னை, நவ 28—

[காங்கிரஸ் எத்தகையக் கட்சி என்பதைப் பண்டித நேரு நேற்று மாலே சென்னை ஜிம்கானு மைதானத்தில் நடந்த பெருங்கூட்டத்தில் விளக்கியுள்ளர். காங்கிரஸ் பல தவறுகளைச் செய்திருக்கிறது, இன்னும் பலதவறுகளைச் செய்யலாம். [illegible]வனும் தவறுகள் செய்தால் வடக் காங்கிரஸ்காரர்களுக்கே பொது மக்கள் ஓட் செய்ய வேண்டு[illegible] என்று பண்டித நேரு கூறியிருப்பதானது சென்னைப் பொது மக்களை நையாண்டி செய்வத[illegible]வே இருக்கிறது. சென்னைப் பொதுமக்கள் ஒரு சிலரைத் தவிர, பதவிப் பேராசையில் கூறு[illegible] இத்தகைய நேர்மையற்ற கூற்றைக் கேட்டு மயங்கி மதியிலிகள் ஆகும் அறிவிலிகளாக அனை[illegible]ரும் ஆகிவிடமாட்டார்கள் என்பதை அவர் அறியாமற் போனது வருந்துதற்குரியது.]

காங்கிரஸ் பல தவறுகள் செய்துள்ளது இன்னும்கூடப்பல தவறுகளைச்செய்யலாம் சுதந்திர போராட்டத்தில் வெற்றி பெற்[illegible] மென பலர் வண்ணத் தோட்டினர்- வெற்றி மயக்கத்தால் காங்கிரஸ் சில தவறுகளை செய்திருக்கலாம் பிற நாடுகளில் உள்ளதுப்போல், மதிமயக்கமடைந்தது பல காங்கிரஸ் காரர்கள் பதவி வேட்டையில் இறங்கினர் அவர்களிடையே ஆர்வமும் உணர்ச்சியும் மறைந்து சோம்பேறித்தனம் மிஞ்சியது கோஷ்டிகளும் கும்பல்களும் பெருகின இதற்கு சரியான வைத்யம் அடிமுதல் அதை சீரமைப்பதே என்று காங்கிரஸ் தலைவர் நேரு பேசினர்.

அப்பாவி மனிதர்; காங்கிரஸில் ஏற்பட்டுள்ள தவறு செப்பம் செய்ய முடியாதது என்பதை இவர் அறியவில்லை. காங்கிரசுக் காரர்களுக்குப் பதவி வெறி பிடித்துவிட்டது; சுயநலம் பெருகிவிட்டது; ஊழல்களைச் செய்வதிலும், மக்களை வஞ்சித்து வாழ்வதிலும் இறங்கிவிட்டனர்.

சான்ருக, காந்தியார் காங்கிரஸ் கட்சியே வேண்டாமென்ருர்; கலைத்து விடவேண்டுமென்ருர். அவர்களுக்குத் தெரியும் இந்தக் காங்[illegible]காரர்களின் யோக்கிதை. [illegible]ல் தான் காட்டை [illegible] பொறுப்பு வகைபோக, [illegible]

அவர் கூறினா[illegible] நேரு என்னகூறுகிருர். [illegible] காங்கிரஸ் எப்போதுமிருக்கு[illegible]ம். தேர்தல் இல்லா [illegible] கூட நீடிக்குமாம். [illegible] எதனைச் சீர்திருத்தியமைக்க[illegible] போகிருராம். என்னகாரி[illegible]த்தி; என்ன அருமையான தே[illegible] தொண்டு!

பண்டித நே[illegible] இன்று தேர்த[illegible] செய்தவருகிருர்- எப்படி[illegible] அரசாங்க விமானத்திலேறி [illegible] ஆபிடங்களிலெல்லாம் [illegible]கத்திற்குப் பெரும் செச[illegible]

எனக்கும் ம[illegible]க்குமிடைப் போலீஸ் ஏற்[illegible] செய்தவாயா? என்று அ[illegible]க்களமாகக் கேட்டார் பண்டித[illegible]ரு. தெரியாதா அவருக்கு அர[illegible]க்கம், இதற்காகப் பெரும் [illegible] செலவு செய்யுமென்று. [illegible] வெறும போலீஸ் அலல[illegible] ஸ்பெஷல் ரிசர்வ் போலிஸ் ப[illegible] அல்லவா ஏற்பாடு செய்ய[illegible]ட்டது. எனவே, தேர்தல் [illegible]ரத்துக்கு வந்த நேருவுக்[illegible] அரசாங்கப பணம் கணக்[illegible]கொண்டு நேற்றுச் செல[illegible]பட்டிருக்

பதேன்!

நேருவின் காங்கிரஸ் செப்பம் செய்ய முடியாத [illegible]ளவுக்குச் சீர்குலைத்து போன கட்சி. [illegible] [illegible] களாகி விட்டனர், அவர்களுக்கு வெற்றி மயக்கம் ஏற்பட்டால் தவறுகள் செய்து விடுவார்கள். இப்படிப்பட்ட மயக்கப் பேர்வழிகளை ஏன் தேர்தலில் ஓட்டுப் போட்டு அனுப்பவேண்டும்.

காங்கிரஸ் கட்சிக்காரர்கள் இல்லாதபோது நாட்டாட்சிநடைபெறவில்லையா? இவர்களுடைய சீர்கேடான ஆட்சியைப் போலில்லையே இவர்களில்லாதபோது நடந்த ஆட்சி! காங்கிரஸ்காரர்கள் ஒழிந்தால்தான் நாடு உருப்படும். ஒரு கூட்டாட்சியின் பொறுப்பேற்க, ஒரு பெரிய கட்சிதான் தேவை என்பது பைத்தியம் பிடித்த பேச்சு. அது சர்வாதிகார வெறியைக் காட்டுவதாகும்.

எனவே, பண்டித நேரு இன்று சர்வாதிகார வெறியும், பதவிப் பித்தும் பிடித்துக் கொண்டிருப்பதால் தான், காங்கிரஸ்காரர்கள் தவறுகள் செய்பவர்களாயிருந்தாலும் அவர்களுக்கே ஓட்டுப் போட வேண்டுமென்று நேரு கூறத் துணிந்தார். கள்ளச்சந்தையினரையும் ஊழல்காரரையும் அபேட்சகராக மீண்டும் நிறுத்தத் துணிந்தார். பல குற்றச்சாட்டுகளுக்கு ஆளான காமராசருடன் திரியத் துணிந்தார். அரசாங்க அதிகாரத்தைத் தேர்தல் பயன்படுத்தக் கூடாதென்றும் அரசாங்கப் பணத்தையோ சொத்துக்களையோ தேர்தலில் கையாளக் கூடாதென்றும் சொல்லிக் கொண்டே, தாமே அரசாங்க விமானத்தைத் தேர்தல் பிரசாரத்தில் பயன்படுத்தத் துணிந்தார். அரசாங்க அதிகாரம் இன்று தேர்தல் பிரசாரத்தில் பயன்படுவதை கேற்றுக் கண் முன்னுல் நேரில் கண்டிருக்கும் கண்டும் காணுதவரைப் போலிருந்துவிட்டார். இத்தகைய காங்கிரஸ்காரர்களைப் பொதுமக்கள் நம்பினால், நாடு நட்டாற்றில் அதோகதியாக கைவிடப்படும் என்பது உறுதி.

ஜெர்மனியிலுள்ள அமெரிக்கத் துருப்புகள்

பிராங்பர்ட் நவ. 28—

ஜெர்மனியிலுள்ள அமெரிக்க தரைப்படைகளும் விமானப் படையினரும் அணு குண்டு தாக்குதலைச் சமாளிக்கும் பயிற்சிகளைப் பெற்றாக வேண்டும் என்று எச்சரிக்கை விடப்பட்டிருக்கிறது.

இதற்கான சாதனங்களும் கருவிகளும் ஜெர்மனிக்கு வந்துக் கொண்டிருக்கின்றன.

குப்பை உர தயாரிப்புப்பற்றி சினிமாப் படம்

சென்னை, நவ 27—

குப்பை உரம் சம்பந்தமாகச் சென்னை ரெவின்யூ போர்டார் ஒரு சினிமாப் படம் தயாரித்திருக்கின்றனர். “குப்பையிலிருந்து கிடைக்கும் செல்வம்” என்று இப்படத்திற்குப் பெயரிடப்பட்டிருக்கிறது. சாணம் முதலியவற்றைச் சரியா[illegible] பாதுகாத்து[illegible] குப்பை[illegible] [illegible] [illegible]த்தரிக்கப்பட்டிருக்கின்றன. இப்படம் தமிழிலும் தெலுங்கிலும் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இதை வெளியூர் கூடாரக் கொட்டகைகளில காட்ட சர்க்கார் ஏற்பாடு செய்து வருகின்றனர்.

இந்தியாவுக்கு அமெரிக்க மூலதன உதவி

அமெரிக்க ஸ்தானிகர் கருத்து

கல்கத்தா, நவ, 26—

தற்போதை சர்வதேச கொந்தளிப்பு பூராவாக தணிந்தவுடன் இந்தியா உள்பட பின் தங்கிய நாடுகளுக்கெல்லாம் அபிவிருத்தித் திட்டங்களுக்கு அமெரிக்கா மூலதனம் தந்து உதவும் இந்தியாவிலுள்ள யு எஸ். ஸ்தானிகர் செஸ்டர்பௌலஸ் கூறினார் ஆனால் இந்தியாவுக்கு உடனடியாக அமெரிக்கா அவசரமாக மூலதனம் அனுப்புவது சாத்தியமில்லை என்றார். இன்று சிருபர்கள் கூட்டத்தில் பேசுகையிலேயே பௌலஸ் மேற்கண்டவாறு கூறினார்,

மற்ற நாடுகளில் புதிதாக யு. எஸ். மூலதனம் கிடைப்பது குறைவாக இருப்பதற்குக் காரணம (1) தற்போதைய சர்வதேச கொந்தளிப்பு கொரியா யுத்தம் (2) தென் அமெரிக்கா வட அமெரிக்கா இன்னும் இதர இடங்களில் ஏற்கெனவே பல துறைகளில் அமெரிக்க [illegible] முடக்கியுள்ளது.

தற்போதைய உலக நிலைமை காரணமாக 6 கோடி 10 லட்சம் டாலரை பாதுகாப்புக்காக அமெரிக்கா பட்ஜெட்டில் ஒதுக்கவேண்டியிருக்கிறது யுத்த தளவாடங்களுக்காக இவ்வளவு பணம் செலவிடுவது சரியல்ல இருந்தா யு. எஸ். ஸைப் பொறுத்தவரையில் இது அத்யாவசியமான து கொரியா யுத்தம் முடிந்து சர்வதேச கொந்தளிப்பு தணிந்தவுடன் யு. எஸ். மூலதனத்தின் பெரும் பகுதி வெளியிடப்படும் அப்பொழுது அமெரிக்க மூலதனம் இந்தியாவுக்கு கிடைக்கும் சர்க்கார் இதில் தலையிடாது.

இந்தியாவில் முதல் முடக்க நிலைய சந்தர்ப்பம் இருக்கிறது ஆனால் ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்கு மூலதனம்வருவதற்கு கொஞ்ச காலம் பிடிக்கும் இதற்கிடையே மூலதனம் போடுவதற்கு ஊக்கமளிக்கும் ரீதியில் சர்வதேச நிலைமையும் சாதகமாக இருக்கவேண்டும் இந்நிலைமை இந்தியாவில் துரிதமாக ஏற்படுத்தப்படுவது கண்டு தான் மகிழ்ச்சியடைவதாகவும் செஸ்டர் பௌலஸ் கூறினார்.

[illegible]ம்! நாம்!!

[illegible] மாநாடுகளை மகத்தான முறையில் [illegible]

[illegible]ருத்த மாநாடு, மாணவர் மாநாடு, [illegible]நாடு, பெண்கள் மாநாடு, எழுத்[illegible]ன்ற வரிசையிலே கொள்கைப் [illegible]ம்,

[illegible]னை வந்தபோது அடக்கு[illegible]

[illegible]ப் பிரயோகத்திற்கு [illegible]

[illegible]மை மீறிச் சிறை [illegible]பெற்ற நாம்,

[illegible]றச் சாலைக்கு [illegible]து அலட்சியச் [illegible]

[illegible]யர்ந்து விடாத [illegible]

[illegible] நாம், வட ஆற்[illegible]ல “ஆரியமாயை”த் [illegible] நாம்,

[illegible]ளைக் கழகங்களை [illegible] நடத்தும் நாம்,

[illegible]மூவாயிரத்துக்கு மேற்பட்ட [illegible] நடத்திக்காட்டி நாட்டுப் [illegible]

[illegible]லே கொள்கையைச் சொல்லி, [illegible]ம் நாம்,

[illegible]தோற்கின் எப்படை ஜெயிக்கும்! [illegible] படைக்கஞ்சான்” என்ற வீர [illegible]ற்றிச் சிங்கமென உலவும் தளபதி [illegible]கொள்கைத் தங்கத்தைப் பொதுச் [illegible] பெற்று பூரிப்படைகிற நாம்,

[illegible]தொழிலாளர், படித்தவர், பாமரர், [illegible]ளத்திலும் அழியாதச் சித்திரங்களாகி [illegible]ஞ்சா நெஞ்சம் படைத்த முன்னணி வீரர் [illegible]பாசறையாகக் கழகத்தைவளர்த்துள்ள நாம்,

பணக்காரருக்குப் பணியாமல், பதவிக்குப் பாசக் கயிறு வீசாமல், வளர்த்து வந்த கொள்கையில் வழுக்கி விழாமல், கண்யம் கெடாமல், கட்டுப்பாட்டை மீறாமல், எந்த நேரத்திலும் இன முழக்கத்தை மறக்காமல், இளித்துப் பேசுவோரிடம் ஏமாந்து இலட்சியக் கீதத்தின், சுருதியை விட்டு விடாமல், “திராவிடம் நமது பிறப்புரிமை” என்ற மூல முழக்கத்தை மூளியாக்காமல் முன்னேற்றப் பரணி பாடுகிற நாம்;

இலட்சிய வாதிகளான நாம்.

இந்நாட்டுக் குரியவர்களான நாம், கூடப் போகிறோம் சென்னையில் மாநில மாநாட்டில்!

டிசம்பர் 13, 14, 15, 16, நாட்களில் திட்டம் வகுக்க!

திறமையோடு பணிபுரிய!

தீப்பொறி பறக்கும் தீர்மானங்கள் நிறைவேற்ற!

வாரீர்! வாரீர்!!

மு. கருணநிதி
விளம்பரச் செயலாளர்

ஈரானில் பெருங்கலகம்

(0)

மாணவர் போலீஸ் கைகலப்பு

120 பேருக்குக் காயம்

பள்ளிக்கூடப் பெண் மாணவர்களில் கம்யூனிஸ்ட் சார்புள்ளவர்களுக்கும் எதிர் கோஷ்டிக்கு மிடையே தோன்றிய மோதலையடுத்து மூண்ட இக்கலவர சம்பவத்தைத் தொடர்ந்து போலீஸ் அதிபர் ராஜினுமாச் செய்துவிட்டார். தொழிலாளர் மந்திரியை உடனே அப்பதவிக்கு மந்திரி சபை நியமித்தது.

தங்களிடம் சண்டை போட்ட பெண்மணிகள் கும்பலைக்கலைக்க போலீஸார் தீயணைப்பு வண்டிகளை வரவழைத்து, அவற்றின் குழாய்கள் மூலம் ஐஸ் ஜலம் பீச்சினர் போலீஸாரின் தந்திரம் பலித்துவிடும் சமயத்தில் அருகிலிருந்த கல்லூரியைச் சேர்ந்த மாணவர்களும் ஸ்தலத்துக்கு வந்துவிட்[illegible] மாணவிகளை தம் முற்றிய[illegible]து சகோதரிகளைத் தொடும் தைரியம் யாருக்கு இருக்கிறது என்று ஆத்திரமுடன் கோஷமிட்டுக் கொண்டு தடிகள் கத்திகளுடன் போலீஸார் மீது அவர்கள் பாய்[illegible] போலீஸாரும் பதிலுக்[illegible]ச்சுமூட்ட ஆக்ரோத்தி[illegible] பெண் மாணவர்க[illegible]ளுடன் தரையில் வி[illegible]. இறிது நேரத்திற்கெல்லாம் மாணவர்கள் தங்கள் வீடுகளுக்குத் திரும்பினர் போலீஸாரும் துருப்புகளும், பாரசீக சேனைனர் மூடப்பட்டிருந்த கடைகள் திறக்கப்பட்டன.

கலவரம் பற்றிய செய்தியைக் கேட்டதும் போலீஸாரும் அப்பாக்கிகள் [illegible]தம் துருப்புகளுடன் தெருக்களில் உஷாராயிருந்தனர். மெஷின் அப்பாக்கிகள் கண்ணீர் வாயு குண்டுகளும் தயாராயிருந்தன. கடைகளை மூட உத்தரவிடப்பட்டது.

ஈரான் செனட்டில் பிரதமர் டாக்டர் முஸாதிக்குக்கு ஏகமனதான நம்பிக்கை வாக்கு கிடைத்தது டிசம்பர் 4-ந்தேதி தேர்தல் நடத்த முதலில் அவர் சம்மதித்தார். ஆனால், பிற்பாடு தமது முந்தைய திட்டத்துக்கு செனட் ஆதரவு அளிக்கவேதாமதமின்றி தேர்தலைத் தவக்க உறுதிமொழி தெரிவித்தார். டிசம்பர் 18-ந் தேதி வரையில் தேர்தலை ஒத்தி வைக்க மஜ்லிஸ்மசோதா அனுப்பியதை செனட் கிராகரித்தது. எழுத்தறிவு உள்ளவர்களே ஓட போடலாமென்ற மசோதாவும் செனட்டில் நிறைவேறியது.

ஆந்திர மாகாணப் பிரச்னை

விநோபாவுக்கு சீதாராம் கடிதம்

விஜயவாடா, நவ 26—

ஆந்திர மாகாணம் ஏற்படுத்துவது பற்றி அவருடைய முயற்சிகள் பற்றிய முடிவை தெரிவிக்குமாறு ஆச்சாரியா விநோபாவுக்கு சீதாராம் கடிதம் எழுதியுள்ளதாகத் தெரிகிறது.

ஆச்சாரியா விநோபாவே தலைப்பிட்டதின் பேரில் ஸ்வாமி சீதாராம் தமது உண்ணுவிரதத்தை நிறுத்தியது வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம். டி. பிரகாசத்திற்கு பாவே ஒரு கடிதம் எழுதியுள்ளதாகவும அதற்கு அவர் பதில் தெரிவித்திருப்பதாகவும் சென்னை நகரை ஒரு காலும் விட்டுக்கொடுக்க முடியாதென்று கூறியிருப்பதாகவும் தெரிகிறது.

29-11-51

மாலை 6 மணிக்கு
திருநெல்வேலியில்
தி. மு. க. கூட்டத்தில்
மு. கருணநிதி
பேசுவார்

நேருவின் அபேட்சைப் பத்திரம் செல்லும்

மத்திய சட்டசபைக்கு அலகாபாத் ஜில்லாவிலிருந்து பண்டித நேரு தாக்கல் செய்திருந்த அபேட்சா பத்திரம் செல்லாதென உத்தரவிட கோரி எல்.ஜி. தாட்டே சமர்ப்பித்திருந்த மனுவை அலகாபாத் ஹைகோர்ட் இன்று நிராகரித்தது.

ஹிந்துமகாசபை அபேட்சகரான தாட்டேதாம் சமர்ப்பித்திருந்த மனுவில், நேரு, பிரகாசா மசூரியாதின் ஆகிய மூன்று காங்கிரஸ் அபேட்சகர்களுடைய அபேட்சா பத்திரங்களும் செல்லாதென குறிப்பிட்டிருந்தார்.

அவருடைய மனு இன்று பிற்பகல் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்ப[illegible]ல்லத்தக்கதல்ல[illegible]ரிக்கப்படும் மூ[illegible] அபேட்சா பத்திரங்களும் இன்று ஏற்கனவே பரிசீலனை செய்யப்பட்டு செல்லத்தக்கவை என்று முடிவு கூறப்பட்டு விட்டபடியால் இந்த மனு பிரயோசனமில்லாமல் போய் விட்டதென்று மனுதாரர் சார்பில் ஆஜரான வக்கீல் எஸ். என். மிஸ்ரா கூறினார்.

மாலைமணி

சென்னை 28—11—51 புதன்கிழமை

நிபந்தனையற்ற சரணாகதியா?

"திராவிடஸ்தான் கோரிக்கை நியாயமானதென்று கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது" என்பதாக கம்யூனிஸ்ட் தலைவர் தோழர் டாங்கே அவர்கள் புதுடில்லி பத்திரிகை நிருபர்கள் கூட்டத்திலே கூறியிருக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் அறிஞர் அண்ணா அவர்கள் தேர்தல்பற்றி விடுத்திருக்கும் நீண்ட அறிக்கையில் இதைக்குறித்துதான் 'கம்யூனிஸ்ட் கட்சியினர், திராவிடத் தனி அரசுப் பிரச்சினை போன்ற இனவாரி மாகாண அமைப்புப் பிரச்சினையை ஆதரிப்பதாக, அவர்களின் பொதுக் கூட்டத்திலே பேசப்படுகிறது. திராவிடத் தனியரசு கோரிக்கையை ஏற்றுக் கொள்கிறேன், என்ற உறுதிமொழியை, எழுத்து மூலமாகத் தருவது, எந்த வகையிலும் கம்யூனிஸ்டுக் கட்சிக்கு ஊறு தேடாது; தி.மு.கழகத்தின் ஆதரவு பெறுவதற்கு இது பெரிய [illegible] தொரா வில்லையுமாகாது' என்ற விஷயத்தை வலியுறுத்தியிருக்கிறார். நேசக்கரம் தேவையென்பவர்கள், நேர்மையை விரும்புகிறவர்கள் யாருமே மறுத்துரைக்க முடியாத விளக்கங்களை அண்ணாவின் அறிக்கை அள்ளிக் கொட்டியிருக்கிறது.

இந்த அறிக்கை மட்டுமல்ல; மதுரையின் முடிவுகூட பொதுமக்களின் ஆதரவுக்குப் பாத்திரமாகிவிட்டது என்பதற்கு ஆதாரம் தேவையில்லை. ஆங்காங்கு நடைபெறும் கூட்டங்களிலே மதுரை முடிவு பற்றி ஆதரித்துக் கிளம்பும் முழக்கங்களும், செல்லுமிடமெங்கும் சரியான முடிவு செய்தீர்கள் என்று கைகுலுக்குகின்ற காளையர் மொழிகளும் மட்டுமே போதுமானது!

மதுரை முடிவு, கம்யூனிஸ்டுகளை தட்டிக்கழிக்க வேண்டுமென்பதற்காக செய்யப்பட்டதல்ல. காங்கிரசின் கொடுமை வளரவேண்டும்—என்ற கோரநினைவு கொண்டவர்கள் நாம் என்பதற்குள்முனையளவுகூட மதுரை முடிவிலே இடமில்லை.

ஆனாலுங்கூட கம்யூனிஸ்டுகளின் நிழலிலே நிலைபெறவேண்டும் என்கிற கடைசி வழியைப்பின்பற்றுகிற மரணமூச்சிக்காரர்கள் சிலர் நம் தீர்மானம் அற்பத்தனமானது என்று அலட்சியமாக இடும் கொக்கரிப்பு கொள்கிறார்கள்.

[illegible] களாக திராவிடத் [illegible] பிரச்சினையை பட்டி தொட்டிகளி லெல்லாம் பறைசாற்றி வருகிற நாம், தேர்தல் காலத்திலே அந்த மூல முழக்கத்தை மூலையில் எறிந்துவிட்டு மாற்றுக் கட்சியினரின் நிபந்தனை கட்கு ஆட்படுவதுபோல உதவியை வலிய நீட்டி மண்டியிடுவது அரசியல் உலகம் கண்டு நகைக்க வேண்டிய ஒரு கேலிக்காட்சியாகத்தான் இருக்கும்.

"காங்கிரஸ்காரர்களே மந்திரியாக வரட்டும்; திராவிட நாடு பிரிந்தால் போதும்!"

என்று ஒரு காலத்திலே பேசிவிட்டு, இன்று, திராவிட நாடுபற்றி இப்போது கவலையில்லை யென்று கூறுவது சிறிதளவு மதி படைத்தவர்களாலும் சிரித்துப் பேசப் படக்கூடிய செயல்!

கம்யூனிஸ்டுகள், திராவிட நாட்டுப்பிரச்னைக்கு உறுதி தரவேண்டுமென்று கேட்பதால் நாம் திராவிட நாட்டைப் பெற முடியாத கோழைகளாக ஆகிவிட மாட்டோம்.

இருவரும் சேர்ந்து யானையைப் பிடிக்கலாம் வா என்று கூப்பிடுகிறவனிடம், "நான் யானையைப் பிடிக்க வருகிறேன் யானையைப் பிடித்த பிறகு புலியைப் பிடிக்க நீ என்னோடு ஒத்துழைப்பாயா?' என்று கேட்டால் அது கோழைத்தனமா?

புலியைப் பிடிக்க துணை வருவீரோயா என்று கேட்பது கோழைத்தனமானால் யானையைப் பிடிக்க துணை கேட்பதற்கு பெயர் என்ன?

திராவிட நாட்டுப் பிரச்னைக்கு துணை கோருவது கோழைகளின்செயலானால், காங்கிரசை ஒழிப்பதற்குகம்யூனிஸடுகளின் துணையை நாடுவதற்கு என்ன பெயர்?

திராவிடப் பிரச்சினை நியாயமானது என்று கம்யூனிஸ்டுகள் பேசுகிறார்கள் பேசுவதோடு நிற்காதீர்கள்; உறுதி தாருங்கள் என்று கேட்கிறோம் நாம், உறுதி கொடுக்காதீர்கள் என்று 'ஜடை' மொழி பேசுகிறார்கள், ஜாரின் பரம்பரையினர் சிலருடன் சல்லாபத்தில் ஈடுபட்டிருக்கும் சிலர்! இந்த சிக்கலான நிலைமையை சிந்தித்து முடிவுக்கு வரவேண்டியவர்கள் கம்யூனிஸ்டுகள்!

அறுநூறு கிளைகளும், பலம் பொருந்திய மாவட்டக் கிளைகளும், ஆற்றல் மிக்க பிரச்சார வீரர்களும் உள்ள ஒரு பெரிய கழகத்தின் கூட்டுறவைக் கேட்டவர்கள் கம்யூனிஸ்டுகள்.

நாமோ, அட்டியின்றி ஆதரவு தர முன்வருகிறோம். அதற்கு ஒரு நிபந்தனை கேட்கிறோம் தவறா இது? காங்கிரசை ஒழிப்பதற்காக கங்கணம் கட்டியுள்ள கம்யூனிஸ்ட், முதலாளித் தனத்தை முறியடிக்க, முழக்கமிடும் கம்யூனிஸ்ட், ஒரு சில இடங்களில், குறிப்பாகச் [illegible]ல்லப் போனால், தஞ்சை மாவட்டத்தின் செந்நெல் வயல்களிலே செந்நீர் பாய்ச்சிடும் அளவுக்கு கொடுமையை வாரியிறைத்த நிலச்சுவான் தாருக்கு விட்டுக்கொடுக்க வேண்டும் என்ற நிபந்தனையை ஜீரணித்திருக்கிறது. அதைவிடக் குறைவான விலைதான் நாம் கேட்கிறோம் இதை ஜீரணிக்க முடியவில்லை என்று யாரும் சொல்ல முடியாது.

கம்யூனிஸ்டுகளுடன் நாம் கலந்து பணியாற்றுவோம் என்றால், பொன்மலையிலே நம் தோழர்களுக்கு அவர்கள் கொடுத்த தொல்லைகளை யெல்லாம் மறந்து விட்டுத்தான் பணியாற்ற வருகிறோம் என்கிறோம்.

பாண்டிச்சேரியிலே நடத்திய பயங்கர கலவரத்தை மறந்து விட்டுத்தான் கூறுகிறோம், பணியாற்ற வருகிறோம் என்று நாம் கேட்பது ஒரே ஒரு நிபந்தனை! இந்த நிபந்தனையைக் கூட ஒரு பெரிய கட்சி விதிக்க [illegible] கட்சியின் பலத்தையே சந்தேகிக்க வேண்டிய நிலைமை தானே ஏற்படுகிறது.

கம்யூனிஸ்டுகள் நடத்திய நேர்மையான போராட்டங்களை யெல்லாம் ஆதரித்திருக்கிறோம் தொழிலாளர் பிரச்சினைகளில் எல்லாம் தோள் கொடுத்திருக்கிறோம்.

இப்போது மட்டுமல்ல—தேர்தல் நேரத்திலே மட்டுமல்ல—இன்று போல் என்றுமே முக்கிய பிரச்சினைகளில் முழுப்பங்கேற்றுத் தொண்டாற்ற முன்வர இருக்கிற முன்னணிக் கட்சியினர்தான் நாம்!

நம் அடிப்படை பிரச்சினையை பணத்திற்காகவோ, அல்லது சொந்த பலஹீனத்திற்காகவோ விட்டுக் கொடுக்கக்கூடிய குறுகிய மதி படைத்தவர்கள் அல்ல நாம்!

இதை கம்யூனிஸ்ட்கட்சி நன்று உணரவேண்டும் உளறல்களுக்கு செவி சாய்த்து உண்மையைக் காற்றிலே விட்டுவிடக் கூடாது!

எதிரி நாட்டின் மீது படையெடுப்பவன், பக்கத்து நாட்டின் படை பலத்தைக் கேட்டுத் தூதனுப்புகிறான். பக்கத்து நாட்டான் நிபந்தனையின் பேரில் படை பலத்தை அளித்தால் அதற்குத் துணை என்று பெயர்! ஒப்பந்தமின்றி உதவிக்கு ஓடினால் அதற்கு 'நிபந்தனையற்ற சரணாகதி' என்றுதான் பெயர்!

அந்த நிபந்தனையற்ற சரணாகதியையா நம்மிடமிருந்து கம்யூனிஸ்டுகள், விரும்புகிறார்கள்? அப்படி விரும்பமாட்டார்களே; அவர்களும் பெரிய கட்சிக்காரர்களாயிற்றே!

அதிகம் பேர் பிரயாணம்செய்ய டிராலி பஸ்கள்

கண்டக்டர் உட்கார்ந்தபடியே வேலை செய்யலாம்

கிளாஸ்கோ, நவ. 27—

அதிகம் பேர் பிரயாணம் செய்ய டிராலிகள் கொண்ட புது ரகபஸ்கள் கிளாஸ்கோவில் விடப்பட்டுவருகிறது.

நெருக்கடியான சமயங்களில் மாடியிலுள்ள இரண்டடுக்கு பஸ்களில் எவ்வளவு போர் கொள்ளுமோ அதைவிட அதிகமாகவே இந்த டிராலி பஸ்களில் பிரயாணம் செய்ய முடியுமாம்.

கண்டக்டருக்கு கோடியில் ஒரு இடம் தனியாக இருக்கிறது அதில் இருந்தபடியே அவர் கட்டணங்களை வசூலித்த பின்பே பிரயாணிகளை உள்ளே அனுப்பலாம் பஸ் கதவுகள் கண்டக்டர் இருந்த இடத்திலிருந்தே ஸ்விச் மூலம் மூடவும் திறக்கவும் முடியுமாம்.

"ஜிப்ச[illegible] செல்[illegible] மேயரா[illegible]

தோழியர் அ[illegible] துணை மேயர்

போட்டியில் [illegible] சி." மண்ணைக் [illegible]

சென்னை, நவ. 27—

1951-52 ஆண்டு [illegible] சென்னை நகரிக்கு [illegible] சி. எச். சிப்கதுல்லா [illegible] மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

நகர மன்ற [illegible] சரித்திரத்திலேயே முதற் [illegible] யாக இவ்வாண்டு ஒரு பெண் உறுப்பினரான தோழியர் அகல்யா சந்தானம் துணை மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது பாராட்டுக்குரியதாகும். துணை மேயர் பதவிக்குப் போட்டியிட்ட ம. பொ. சிவஞானம் அதிக ஓட்டு பெறுமல் தோல்வியுற்றார்

இந்திய ரயில்[illegible]களுக்கு ராட்சஸ இயந்திரம்

லண்டன் நவ 27—

124 டன் எடையுள்ள பெரிய ரயில் என்ஜின் 'ஜலைஸ்லப்' என்கிற கப்பலில் பம்பாய்க்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

இந்திய ரயில்வேக்களுக்காக உபயோகிக்கப்படும் இந்த என்ஜின் பிரிட்டன் விழா கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்தது.

....

பிறப்பு

தோழர் மு. கருணாநிதியின் துணைவியார் தோழியர் தயாளு அவர்கட்கு 27-11-51 மாலை 5 மணிக்கு ஆண் குழந்தை பிறந்திருக்கிறது.

காங்கிரசுக்கு ஓட் போடாதீர்கள்

காங்கிரஸ் தேர்தல் கூட்டத்தில் மக்கள் எதிர்ப்பு

[illegible]

மு. [illegible] சுற்றுப் [illegible]ணம்

28 — [illegible]

28 — மாலை [illegible]

29 — மாலை 4 [illegible]

6 — மணி திருநெ[illegible]

டிச 2 — ஆற்காடு

4 — கடலூர் [illegible]

6 — இன்சினியரிங் [illegible] சென்னை

சுழல் விளக்கு

மாலைமணி

கலை எதிர்பாளர் காணத்தவறியது!

......

சீனு பற்றி சில குறிப்புகள்!

யுத்தகால சைனு உயர்ந்த கலையை சிருஷ்டித்திருக்கிறது. நாடகமும், பாட்டும் தேசிய வாழ்க்கையுடன் இணைக்கப்பட்டிருக்கிறது. சுதந்திர யுத்தத்தில் மக்களின் பங்கு அழகாக நாடகத்தின் மூலமும், பாக்களின் மூலமும் சித்தரிக்கப்படுகிறது.

பாசிச எதிர்ப்பு யுத்தத்திற்காக மக்களைத் தட்டி எழுப்ப நாடகம் சிறந்த கருவியாக விளங்குகிறது.

கிராமங்களிலும், நகரங்களிலும் தேசபக்தியைத் தட்டி எழுப்பும் ஒற்றையங்க நாடகங்கள் [illegible] கூட்டத்திற்கு மாத்திரம் சொந்தமாயிருந்த நாடகம், மக்களிடம் சென்று விட்டது.

பிரசித்திபெற்ற எழுத்தாளராகிய 'டிங்லிங்' தலைமையில் எழுத்துப் புரட்சி பெரும் வெற்றிபெற்றிருக்கிறது.

"கடந்த சில மாதங்களுக்குள் எண்பதாயிரம் விவசாயிகளுக்கு முன், சிப்பாய்களுக்கு முன் நாடகங்கள் நடத்தியிருக்கிறோம். நாங்கள் நாடகங்கள் நடத்துகிறோம், பேசுகிறோம் கிராமத்துச் சுவர்களில் படங்கள் வரைகிறோம், பாடிக் காட்டுகிறோம்" என்கிறார் எழுத்தாளர் டிங்லிங்!

புதியகலை தேசிய யுத்தத்திற்கு ஒரு ஜீவசக்தியை அளித்திருக்கிறது

தேசிய வாழ்க்கையில் கலையின் ஸ்தானம் மிகப் பெரியது. மனித சமூகத்தை உலுக்கிக் குலுக்கும் வலிமை உண்மையான கலைக்குஇருக்கிறது.

மேற்கண்ட உண்மைகள், தேசீயப் போராட்டத்திலே-புதுமைப்புரட்சியிலே—ஜனக் கொந்தளிப்பிலே—சீனு புரட்சிக் கொடி உயர்த்தியிருக்த நேரத்திலே எழுதப்பட்ட "சைனு எங்கே போகிறது?" என்ற நூலில் காணப்படுகின்றன. சீனர்க[illegible] சினிமா, நாடகம், [illegible] இசை, இ[illegible] கொண்டா[illegible] தார்கள் எ[illegible] கிணற்று[illegible] இந்த உல[illegible] லாக அமை[illegible] தெளியும[illegible] தொலையு[illegible]

தேர்தல் தந்திர நடவடிக்கை

காங்கி[illegible] கால[illegible]

கைத்தறித் துணிகளுக்கு ஆதர[illegible]

இவ்வுத்தரவு நிலைத்திருக்கும்[illegible]

சென்னை, நவ 27—

கைத்தறி நெசவாளருக்கு நிவாரணமளித்து ஊக்கமளிப்பதற்காக சர்க்கார் காரியாலயங்களில் கைத்தறி துணிகளை உபயோகிக்கும்படி சென்னை சர்க்கார் உத்தரவு பிறப்பித்திருக்கின்றனர்.

கீழ்கண்ட இலாக்காக்களில் இன்னும் 2 வருஷங்களுக்கு அவைகளுக்குத் தேவையான துணிகளில் பாதி அளவை நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களால் உற்பத்தி செய்யப்படும் துணிகளாகவே வாங்க வேண்டும். மீதமுள்ள பாதி அளவை சிறைகளில் தயாரிக்கப்படும் துணிகளாகவே வாங்க வேண்டுமென்று அவ்வுத்தரவு கூறுகிறது.

இலாக்காக்களாவன—(1) சென்னை கலை, சிறு கைத்தொழில் பள்ளிக்கூடங்களில் மாதிரிகள் செய்தல் (மாடல்கள் வர்ணம் தீட்டுதல், பகுதிகளுக்குத் தேவையான துணிகள; (2) மீன் பிடி இலாக்கா அஸிஸ்டெண்ட் டைரக்டர் காரியாலயத்துக்குத் தேவையான கொசுவலைத் துணி, பெல்டிங் சில்க்: (3) பூ வேலைபாட சம்பந்தமான பரீட்சைக்கு சர்க்கார் பரீட்சை கமிஷனர் உபயோகிக்கும் சாமான்களும், பாக் செய்வதற்கும் டஸ்டர்களுக்கும் (துடைக்கும் துணி) எல்லா இலாக்காக்களில் உபயோகக்கப்படும் துணிகள.

போலீஸ் இலாக்காவும் நெருப்பணைக்கும் படை செர்வீஸும் அவைகளுக்கு வேண்டிய துணி சப்ளைகளை சிறை இலாக்காவிலிருந்து இப்பொழுதுள்ளது போல் பெற்றுக்கொள்ளும்.

ஏதாவது இலாக்காவில் (உதாரணமாக காட்டிலாகா) அதன் சிப்பந்திகளும் அதிகாரிகளும் மில் துணிகளால் தயாரிக்கப்பட்ட யூனிபாம்களை உபயோகித்து வந்தால் இந்த இலாக்கா இந்த உடைகளுக்கு வேண்டிய எல்லா துணி சப்ளைகளையும் சிறை இலாக்காவிலிருந்தே பெற்றுக்கொள்ளும் எல்லா இலாக்காக்களுக்கும் வேண்டிய உடைகளை தைப்பதற்கு சிறை இலாக்காவுக்கே தனிச்சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது.

......

ஓட்டர்கள் அடிமைகளா?

இரகசிய ஓட் போடும் முறை[illegible] இதுதானு?

சென்னை, நவ. 27—

தேர்தலில் வோட்டர்கள் செய்யக்கூடியவைகளைப் பற்றியும், செய்யக்கூடாத வைகளையும் விளக்கி சர்க்கார் வெளியிட்ட கட்டுரையில் பின்வரும் பகுதி காணப்படுகிறது.

"வண்டிச் சத்தத்தைக் கூட்டாகக் கொடுத்தாலல்லாமல் இரண்டு குடும்பத்தினர் ஒரே வண்டியிலேறிக்கொண்டு வோட் போட போகக்கூடாது. ரகசியமாக வோட்டுபோடும் முறையை எவரும் கூறக்கூடாது எவருக்கு வோட்டுப்போட்டார் என்பதை ஒருவர் தமது நெருங்கிய சுற்றத்தாருக்குக்கூடத் தெரிவிக்கக்கூடாது. ரகசியமாக வோட்டுபோடும் விதியை மீறுகிறவருக்கு அபராதத்துடனே அல்லது அபராதமில்லாமலோ 3 மாத சிறை தண்டனை விதிக்கப்படும்."

ரகசியமாக வோட்டுப் போடும் முறை என்றால் என்ன? வோட்டுச் சாவடியில் ஒரு நபர்யாருக்கு வோட்டுப் போடுகிறார் என்பது இன்னொருவருக்குத் தெரியக்கூடாதென்பதே. ஆனால் சர்க்கார் கட்டுரையில் மேற்சொன்ன விதமாக அந்த அர்த்தத்தை விரிவடையச் செய்திருப்பது அக்ரமமாகும்.

நம்பிக்கையற்ற சூழ்நிலையில் ஜனநாயகம் வளரமுடியாது. அடிமை மனப்பான்மையை உண்டாக்கும் நிபந்தனைக்கு உட்பட்டு சுயமரியாதை உள்ள எவரும் வோட்டுப் போடப்போக மாட்டார்.

"வோட்டுப்போடக் கூடாது" என்ற இயக்கத்தையோ அல்லது சத்யாக்கிரகத்தையோ நடத்துவோமா என்று எனக்குத்தோன்றுகிறது. மூன்று மாதங்களுக்கு நிச்சயமாகச்சோறு கிடைக்குமே என்ற ஆசையினால் அந்த சத்யாகிரகத்தில் பங்கெடுத்துக்கொள்ள கிராம வாசிகள் சந்தோஷமாக முன் வருவார்கள் சர்க்காருக்கெதிராக மக்கள் தங்கள் அதிருப்தியைத் தெரிவிக்க இது நல்ல வழியாக இருக்கும் வோட்டர்களின் உரிமையை நசுக்கி நடக்கும் சூழ்ச்சி வேறு வுக்குத் தெரியாது போலும்!

[illegible] செ[illegible] ரே[illegible] ஒரு[illegible]

சே[illegible] இன்று [illegible] லானர்கள் [illegible] வலம் நடை[illegible]

திடிரென [illegible] எதிர்க் கூ[illegible] னால் தாக்[illegible] கூட்டத்தினை[illegible] களையும் [illegible] போலீஸார் விரைந்து வ[illegible] தின் மீது தடி[illegible] செய்தனர். ஆ[illegible] நிலைமை கட்டுக்கு[illegible] போலீஸார் துப்பா[illegible] யோகம் செய்தனர்.

சிறிது நேரத்துக்குப் பின்னர் தொழிலாளர்களின் மேற்படி ஊர்வலம், போலீஸ் பந்தோபஸ்துடன் அமைதியாக நடைபெற்றது.

சம்பவம் ஏற்பட்ட இடத்தைப் போலீஸார் காவல் புரிந்து வருகிறார்கள்.

——

ஆங்கிலப் படத்தில் இந்திய நடிகை நடனம்

லண்டன் நவ. 27—

கபூர்தலா இந்தூர் மோர்வி மைசூர் மகாராஜாக்கள் தர்பார்களில் நடனமணியாக விளங்கிய திருமதி. சுசேதா பிரபல நடிகை லானடர்னர் நடிக்கும் 'மெரிவிடோ' என்ற மெட்ரோ கோல்ட்வின் மேயர் படத்தில் ஜிப்ஸியாக நடிக்கிறார்.

சுசேதாவும் அவர் கணவரும் இந்தியப் பர்சிய ஜிப்சி நடனங்களில் மிகவும் தேர்ந்தவர்கள் அப்படத்தின் நடன டைரக்டர் ஜேக்கோல் என்பவரின் தூண்டுதலின் பேரிலேயே இவர் நடிக்க இசைந்திருக்கிறார்.

......

கிருபலானி தமிழ்நாட்டுப் பயணம் ரத்து

சென்னை, நவ 27—

ஆச்சார்ய கிருபலானி தமிழ்நாடுசுற்றுப் பிரயாணத்தை ரத்து செய்துவிட்டு பெங்களூரிலிருந்து புதுடில்லிக்குப் போய்விட்டார்

[illegible]

…காங்கிரசல்லாத மந்திரிசபை சாத்தியமாகக் கூடாது என்ற நினைப்பில் காங்கிரஸ் தலைவர்களும், காங்கிரஸ் பத்திரிகைகளும் 'கம்யூனிஸ்ட் அபாயம்' என்ற பிரச்னையை முன்வைத்து மற்றவர்களைப் பிளவு படுத்த முயற்சிக்கிறார்கள். இந்த ஏமாற்றுப் பிரச்சாரத்தில் யாரும் ஏமாந்து விடக்கூடாது. கம்யூனிஸ்ட் அபாயம் என்கிற குற்றச்சாட்டு ஆதாரமற்றது. கம்யூனிஸ்ட் தலைவர்களுடனும் தோழர் ஜீவா அவர்களுடனும் பேசியதில் கம்யூனிஸ்ட்கள் ஒரு ஜனநாயக முற்போக்கு அரசாங்கத்தை ஏற்படுத்தத்தான் முயற்சிக்கிறார்களே தவிர கம்யூனிஸ்ட் கட்சி அரசாங்கத்தை யல்ல என்ற உண்மை எனக்குப் பலப்படுகிறது. 12, 13-ந் தேதி நடைபெறும் மந்திரிசபை அமைப்பு மாநாட்டில் இது மேலும் தெளிவாக்கப்பட்டு விடுமென்று உறுதியாக நம்புகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்திடம் தொடர்பு கொண்ட சுயேச்சை அங்கத்தினர்களுக்கு ஒரு வார்த்தை வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். மந்திரிசபை அமைப்பதைப்பற்றி, காங்கிரஸ் தலைவர்கள் மேலுக்கு அலட்சியமாகப் பேசிக்கொண்டாலும் திரை மறைவில், அரசியல் தரகர்கள் மூலம் ஆள் பிடிக்கும் காரியத்தை மும்முரமாகச் செய்துகொண்டு வருகிறார்கள். பொதுமக்களுக்குத் துரோகமிழைக்கும் விதமாக நடத்தப்படும் இந்த அநாகரீக அரசியல் முயற்சிக்கு உங்களில் ஒருவரும் இடம் தரமாட்டீர்கள் என்று உங்களிடம் நெருங்கிய தொடர்பு கொண்ட நான் உணருகிறேன். நீங்களும் இத்தகைய முயற்சிக்கு ஒரு போதும் இரையாகப் போவதில்லை என்பதைப் பொதுமக்களுக்கு அறிவித்து விடக் கோருகிறேன்.

இப்பொழுதுள்ள அரசியல் நிலைமையில், [illegible] கொள்கைச் செலுத்துவதற்காக உடனடியாக உங்களுக்குள் ஒரு கட்டுப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ளவேண்டுகிறேன். இந்த முயற்சிக்கு என் ஆதரவு எப்போதும் உண்டு என்று அறிவித்துக் கொள்கிறேன்.

தோல் பதனிடும் தொழிலில் நெருக்கடி

இந்திய சர்க்காரிடம் தூது செல்ல ஏற்பாடு

மேல்விஷாரம், பிப். 10—

சென்ற இரண்டு மாத காலமாகப் பதனிட்ட தோல், பதனிடாத் தோல் விற்பனை ஸ்தம்பித்துக்கிடக்கிறது என்றும் பதனிடும் தொழிற்சாலைகள் மூடிக்கிடப்பதால் 20,000 தொழிலாளர்கள் வேலையற்றிருக்கின்றனர் என்றும் ஆகவே இது பற்றி இந்திய சர்க்காரிடம் எடுத்துரைக்க தொழிற் சங்கங்கள் பலவும் தூதுகோஷ்டியொன்றில் சேரும்படியும் மேல்விஷாரம் தோல் பதனிடுவோர் சம்மேளன காரியதரிசி ஏ. பார்த்தசாரதி அறிவித்துள்ளார். இந்தியாவில் செய்யப்பட்ட தோல் சாமான்களின் விலையை இந்திய சர்க்கார் கட்டுப்படுத்தி ஏற்றுமதிக்கு உதவ வேண்டுமென்றும் தவிர இந்திய தோல் சாமான்களுக்கு லண்டனில் குறைந்தபட்ச விலையை நிர்ணயிக்குமாறு லண்டன் வர்த்தக போர்டிடம் இந்திய சர்க்கார் கேட்டுக்கொள்ள வேண்டுமென்றும் அவர் ஒரு அறிக்கையில் கூறியுள்ளார்.

நேருவுக்கு 2,33,749 ஓட்கள்

இன்னும் 4 அபேட்சகர்களின் ஓட் எண்ணப்படும்

அலகாபாத், பிப். 11—

டெல்லி சட்டசபைக்கு உத்தர பிரதேசத்தில் அலகாபாத் ஜில்லாத் தொகுதியிலிருந்து போட்டியிடும் நேருவுக்கு மொத்தம் [illegible]கள் கிடைத்[illegible]

[illegible]ளவு படுத்தச் சதி

காங்கிரஸ்காரர்களின் சூழ்ச்சி

கம்யூனிஸ்ட்களின் எச்சரிக்கை

மதுரை பிப் 11—

கடந்த பொதுத் தேர்தலில் நிறைய ஸ்தானங்களை ஜெயித்த காங்கிரஸல்லாத கட்சிகளில் பிளவை உண்டாக்க காங்கிரஸ் சதி செய்வதாக கண்டித்தும், சென்னை மாகாணத்தில் தற்போது அமைக்கப்பட்டுள்ள இடைக்கால சர்க்கார் ராஜினாமா செய்ய வேண்டும் என்று கோரியும் மதுரை கம்யூனிஸ்டு கட்சியின் ஆதரவில் நடந்த பொதுக் கூட்டம் ஒன்றில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

மக்களுக்கு உடனடியாக நிவாரணமளிக்கக் கூடிய காங்கிரஸல்லாத மந்திரிசபையை அமைக்க சவுகரியமாக காங்கிரஸல்லாத கட்சிகளுடன் சேரும்படி சுயேச்சைகளாக தேர்தலில் போட்டியிட்டு ஜெயித்த மெம்பர்களை மக்கள் தூண்ட வேண்டும் என்றும் அந்த தீர்மானம் வேண்டிக் கொள்கிறது.

தற்போதைய அரசியல் கைதிகள் தொடர்ந்து காவலிலோ அல்லது சிறையிலோ வைத்திருக்க காங்கிரஸ் சர்க்கார் முயற்சித்து வருகிறது என்று கம்யூனிஸ்டு ராமமூர்த்தி நேற்று குற்றஞ்சாட்டினார். பல்வேறு மாகாணங்களில் தற்போது காவலில் வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் விடுவிப்பது பற்றி விவாதம் ஒன்றுக்கு டெல்லி சட்டசபை பதிலளிக்கையில் இந்தியபோலீஸ் மந்திரி டாக்டர் கைலாஸ நாத்கட்ஜு கூறியதுபற்றி தமது கருத்தை தெரிவிக்கையில் ராமமூர்த்தி மேற்கண்டவாறு பத்திரிகையாளரிடம் கூறினார்.

[illegible]லாத்கார நடவடிக்கைகளில் ஈடுபட்டவில்லையென்று நிரூபிக்கப்பட்ட எல்லா காவல் கைதிகளையும் விடுதலை செய்யும்படி மத்திய சர்க்கார் உத்தரவிட்டிருப்பதாக போலீஸ் மந்திரி கட்ஜு கூறினார். [illegible]மாதிரி பலாத்காரத்தில் [illegible]டதாக எந்த காவல்கைதி [illegible] சர்க்காருக்கு சாட்சியமும் சந்தேகமும் இருந்தால், அவர்களை கோர்ட்டில் கொண்டு வந்து விசாரிக்கட்டும் என்று ராமமூர்த்தி சவால் விடுத்தார்.

கம்யூனிஸ்டுகள் மீது [illegible] சர்க்கார் சாட்டியுள்ள [illegible] குற்றச்சாட்டுகளை மக்கள் நம்புவதில்லை. சென்னை, கேரளம் ஹைதராபாத், வங்காளம், ஒரிஸா ஆகிய மாகாணங்களில் தேர்தலில் ஏராளமான கம்யூனிஸ்டுகளை ஆதரித்து மக்கள் தீர்ப்பளித்திருப்பது இதற்கு ஒரு சான்று ஆகும். மக்களின் இந்த ஜனநாயக பூர்வமான தீர்ப்பை காங்கிரஸார் மதிக்காமல் இருப்பது, மக்கள் மீதும், தங்களது அரசியல் எதிரிகள் மீதும் அடக்குமுறை ஆட்சி நடத்த காங்கிரஸ் சர்க்கார் முற்பட்டுள்ளனர் என்பதை இன்னும் நன்றாக தெளிவுபடுத்துகிறது.

தோல்விப் படலம்

12-2-52 வரை

திருவாங்கூர்-கொச்சி (பூர்த்தி)

காங்கிரஸுக்கு	—44
எதிர்கட்சியினருக்கு	—64

ஹைதராபாத் (பூர்த்தி)

காங்கிரஸுக்கு	—93
எதிர்கட்சியினருக்கு	—82

பம்பாய்

காங்கிரஸுக்கு	—269
எதிர்கட்சியினருக்கு	—45

ஒரிஸா (பூர்த்தி)

காங்கிரஸுக்கு	—68
எதிர்கட்சியினருக்கு	—72

ராஜஸ்தான்:

காங்கிரஸுக்கு	—77
எதிர்கட்சியினருக்கு	—77

பாட்டியாலா:

காங்கிரஸுக்கு	—25
எதிர்கட்சியினருக்கு	—35

தொகுதியில் மொத்தம் சுமார் 5 லட்சம் ஓட்டுகள் பதிவாகியிருக்கும் என்று மதிப்பிடப்படுகிறது.

பண்டித நேரு உள்பட 3 அபேட்சகர்களின் வோட்டுகள் இதுவரை எண்ணி முடிக்கப்பட்டுள்ளன.

மீதி 4 அபேட்சகர்களின் ஓட்டுகள் இனிமேல் எண்ணப்படும்.

கம்யூனிஸ்ட் கட்சி மாபெரும் கூட்டம்

................(ஃ)................

மேடையில் மணலி கந்தசாமி தோன்றினர்

திமு. க. கம்யூனிஸ்ட், தி க கூட்டு சக்தியால் கொடுமைகளை தவிர்ப்போம்

— மணலி

11 2-52 மாலை 6 மணிக்கு சென்னை திருவல்லிக்கேணி கடற்கரையில் கம்யூனிஸ்ட் கட்சியின் மாபெரும் கூட்டம் நடைபெற்றது. தேர்தலில் வெற்றிபெற்ற கம்யூனிஸ்ட் தோழர்களை அறிமுகப்படுத்தி தோழர் பி. ராமமூர்த்தி சொற்பொழிவாற்றினார். கடைசியாக தலைமறைவாக இருக்கும் மணலி கந்தசாமி மேடையில் தோன்றி அடக்குமுறை ஆட்சியின் அதிகார வெறியைக் கண்டித்துப் பேசினார். தி. மு. க. கம்யூனிஸ்ட், தி. க. கூட்டு சக்தியால் இந்நாட்டு கொடுமை நிறைந்த பிற்போக்கு சக்திகளை அழித்திடுவோம் என்று அவர் கூறினார். கூட்டத்தினர் தங்கள் உற்சாகத்தை உணர்ச்சியோடு வெளிப்படுத்தி அந்த கூட்டு சக்தியின் அமைப்பை வரவேற்று கையொலி செய்தனர்.

'மணலியின் வாரண்டை ரத்து செய்' என்ற முழக்கம் கடல் அலையின் ஒலியையும் வென்றது.

தோழர் டாங்கே அவர்கள் சிறிது நேரம் பேச பின்னர் கூட்டம் இனிது முடிவுற்றது.

[illegible] இலங்கை ரப்பர்

கொழும்பு, பிப். 10—

கம்யூனிஸ்டு சைனாவுக்கு 1850 டன் இலங்கை ரப்பரை ஏற்றிக்கொண்டு ரஷ்யக் கப்பல் ஒன்று இன்றிரவு இங்கிருந்து புறப்படும். சென்றமே மாதம் ஐக்கிய நாடுகள் சபை, செஞ்சீனாவுக்கு கேந்திரப் பொருள் ஏற்றுமதியை தடை செய்த பிறகு, இலங்கை 3-ந் தடவையாக ரபபரை சைனாவுக்கு ஏற்றுமதி செய்கிறது. இலங்கை மேற்படி தடையை ஆதரிக்கவில்லை.

தற்போது அனுப்பப்படும் ரப்பருக்கு உலக விலையைவிட அதிக விலை சைனா கொடுப்பதாக கூறப்படுகிறது.

இடதுசாரி அரசியல் வாதிகளை திருப்திபடுத்த இலங்கை சைனாவுக்கு ஏற்றுமதி செய்வதாக அமெரிக்கப் பத்திரிகைகள் கூறுவது கண்டு ஸ்தல ஏற்றுமதியாளர்கள் கோபம் கொண்டனர்.

8 அவுன்சு...

(1-ம் பக்கம் தொடர்ச்சி)

காலை டின்னுக்குப் புறம்படுகிறார் அவரு[illegible] உணவுஇலாகா காரியதரிசியும் செல்லுவார்.

அரிசி இருப்பு நிலை

பிப்ரவரி இரண்டாம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில் சென்னை ராஜ்யத்தில் 4279 டன அரிசி கொள்முதலாகியது இது அதற்கு முன்வாரத்தைவிட 1,3 டன் அதிகம் தஞ்சையில் 12400 டனும் கிருஷ்ணாஜில்லாவில் 1171 டன அரிசியும் கொள்முதலாகியது குறிப்பிடத்தக்கது.

பிப்ரவரி இரண்டாம் தேதியன்று சென்னை ராஜ்ய அரிசிக் கையிருப்பு 280642 டன் அதற்கு முன்வாரம் 259558 டன் இருப்பில் இருந்தது.

பிப்ரவரி ஆறும் தேதியன்று சென்னை நகரில் 28 நாட்கள் தேவைக்குப் போதுமான 9065 டன் அரிசி கையிருப்பிலிருந்தது.

Printed & Published T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthiappan Chetty Street, Madras.

தி. மு. கழக நடவடிக்கைகள்

நாயினர்கோவில்:— 1-2-52 பகல் 1-30 மணிக்கு நாயினர் கோவில் தி மு க செயற்குழு கூட்டம் பாஸ்கரன் தையல் கடையில் ச திருநாகலிங்கம் பிள்ளை தலைமையில் கூடிற்று செயலாளர் ஆர் பாஸ்கரன் கொடுத்த ராஜினாமா ஏற்று அ மங்கள நாகலிங்கம் அவர்களை செயலாளராகத் தீர்மானித்தது அ மங்கள நாகலிங்கம் பணியாற்றி வந்த பொருளுறுப்பினர் பணியை விளம்பர உறுப்பினர் எஸ் கார்த்திகேயன் சேர்த்து பணியாற்றிவர தீர்மானித்தது 24 2-52 ல் காங்கிரஸ் ர கண்ணன் அவாகளால் கத்தியால்குத்திகொள்ளப்பட்ட இடக்க வீரர் மஜீத் குடும்பத்தாருக்கு அனுதாபம் தெரிவித்து மாலை 4-30 மணிக்கு கூட்டம் முடிவுற்றது.

அமெரிக்கா பற்றி இளைஞர் கருத்து

நியூயார்க். பிப், 10—

ஆசிய, மத்ய கிழக்கு, அமெரிக்க ஹைஸ்கூல்மாண[illegible] [illegible] சிலாக்யமானதுமான் உடன்பாட்டிற்கு வழிகான முயலுகிறது.

இதில் மந்திரமேதுவுமில்லை. ஒரு நாட்டைச் சேர்ந்த இளைஞரை இதர நாட்டு இளைஞருடன்கலந்து உறவாடும்படிச் செய்யுங்கள். உடன்பாட்டிற்கு அதுவே வழி.

இதுவே ஐந்தாவது வருஷாந்திர ஹெரால்ட் டிரிபியூன் இளைஞர் அரங்கம் சார்பில் அமெரிக்காவுக்கு விஜயஞ் செய்திருக்கும் 23 ஆசிய, மத்ய கிழக்கு நாடுகளின் வாணவர்கள் சாதிக்கும் காரியமாகும்.

இவர்கள் அனைவரும் அமெரிக்கமாணவரின்குடும்பங்களில் அங்கத்தினராக இருக்கிறார்கள். இவர்கள் அமெரிக்கருடன் பாடசாலைக்குச் செல்கிறார்கள். பொழுது போக்குகளில் பங்கெடுத்துக் கொளகிறார்கள்; குடும்ப வேலைகளிலும் ஈடுபடுகிறார்கள்.

இம்மாணவரது அநுபவத்தைப் பாக்கிஸ்தான் மாணவரான ரியாஸ் முஹமது சுருங்கக் கூறியதாவது:

அமெரிக்கருடன் வசிப்பதும அவர்களுடன் பாடசாலைக்குச்செலவதும்மானிடர் ஓரே இனமென்பதை நான்உணரும்படிச்செய்தது

இங்கே எனது வயதுள்ள மாணவருடன் சம்பாஷிக்க எனக்கு சந்தர்ப்பமொன்று இருந்தது. நாங்கள் அபிப்பிராயங்களைப் பரிமாறிக் கொண்டோம். இந்த முறை நங்கள் ஒருவர் மற்றவரது வாழ்க்கைமுறையைஅறிந்துகொள்ள முடிந்தது. சர்வதேச உடன்பாடு ஏற்பட பல வழிகளில் இது ஒன்றாகும்.

பெற்றோர்களிடமும் ஆசிரியர்களிடமும் அமெரிக்க மாணவர் கொண்டிருக்கும் உறவும் தற்கால உலக விவகாரங்களை விவாதிக்க [illegible] சாலை [illegible] வருக்குள்ள திறமையும் வியப்பை உண்டுபண்ணின வென்றும் ஹெரால்ட் டிரிபியூன் இளைஞர் அரங்கத்தின் இந்திய பிரதிநிதிகளான மிர்டில் துரைராஜுல் ராஜேந்திர பாராவும் கூறினார்.

இப்பிரதிநிதிகள் ஒருமாத காலமாக அமெரிக்காவிலிருககிறார்கள். அந்த ஒரு மாதத்தில் அவர்கள் நியூயார்க் நகரிலும் அதைச் சுற்றிலுமுள்ள உயர்தரபாடசாலைகளுக்கு விஜயஞ் செய்தனர். தற்போது ராஜேந்திரநாத் நியூயார்க்கைச் சேர்ந்த வாலீஸ்டிரீமிலிருக்கிறார்; மிர்டில் துரைராஜ் நியூஜெர்ஸியைச் சேர்ந்த பவுண்ட் புருக்கிலிருக்கிறார்

உயர்தர பாடசாலையில் போதிக்கும் பாடங்களில் அமெரிக்க உயர்தர பாடசாலைகளுக்கு இந்திய உயர்தர பாடசாலைகளுக்குள்ள வேறுபாடுகள் சில வற்றைப் பற்றி அபிப்பிராயம் கூறுகையில் மிர்டில் துரைராஜ் தெரிவித்ததாவது நீங்கள் இங்கே நாடகம், டைப்ரைட்டிங், மனோ தத்துவ சாஸ்திரம் இம்மூன்று பாடங்களைப் போதிக்கிறீர்கள். இப்பாடங்களை எமது பாடசாலையில் போதிப்பதே இல்லை-என்று ராஜேந்திரநாத் சொன்னார் அமெரிக்க பாடசாலைகளில் எத்தனையோ பாடங்கள் போதிக்கப்படுகின்றன. அவற்றில் இஷ்டமானதை மாணவர்கள் பொறுக்கிக கொள்ளலாம்.

மிர்டில் துரைராஜ் என்ற பவுண்ட் புருக் என்ற டவுனில உயர்தர பாடசாலை கூட்டமொன்றில் பேசுகையில் அமெரிக்க மாணவராகிய நீங்கள் சர்வதேச விவகாரங்களை நன்றாக அறிந்திருக்கிறீர்கள், நீங்கள் புத்திகூர்மையுடனும் அவற்றை விவரிக்கிறீர்கள் என்று கூறினார்,

துரைராஜ் முடிவுரையாகக் கூறியதாவது அவ்வப்போது நாங்கள் வகுப்புகளுக்குச் செல்வதில்லை. அதே வாழ்க்கை உளளவர்களாகவே இருக்கிறார்கள் (கரகோஷம்)

பவுண்ட் புருக்ஹைஸ்கூல் தலைமை ஆசிரியர் ஹார்வி நிகொலஸ் கூறியதாவது துரைராஜின் விஜயம் எங்களுக்குப் பெருமகிழ்ச்சியை உண்டு பண்ணுகிறது. அச் சிறுமிக்குக்களைப்பு ஏற்படும் விதத்தில் கேள்விகள் கேட்கப்படுகின்றன.

அந்த ஹைஸ்கூலின் ஆலோசகர் என் என்பவர் சொன்னார் எமதுபாடசாலை வாழ்க்கையில் ராஜேந்திரர் அதிகம் கலந்து விட்டார். தொழில் நுட்ப பாடசாலை மட்டங்களில்தான் அவருககு விசேஷ சிரத்தை உண்டு. அவர் சில இடம் பார்க்க ஏறபாடு செய்யவும் முயலுகிறோம். அவர் ஆழ்ந்த சிநதனை செய்பவர் தமது நாட்டின் சிறந்த பிரதிநிதியாக விரும்புகிறார் அவரது கேள்விகள் சில வற்றிறகு விடை பகருவது சுவாரஸ்யமான காரியமாகவே இருக்கிறது.

இடைக்கால சர்க்கார் மந்திரிகள்

இலாக்காக்கள் பிரிவினை

சென்னை, பிப் 11—

சென்னை காபந்து சர்க்கார் மந்திரிகளிடையே பின்வருமாறு இலாகாக்கள் பிரிவினை செய்யப்பட்டிருக்கிறது:-

குமாரசாமி ராஜா

பொது, போலீஸ், மததர்ம ஸ்தாபனம் ஸ்திரீகள் க்ஷேமாபிவிருத்தி நலன், மோட்டார் போக்குவரத்து இலாக்காக்கள்.

சீதாராம ரெட்டி

நிலவரி தொழிலாளர் பொது மராமத்து வியாபார வரி, ரிஜிஸ்டிரேஷன் சட்டம் கோர்ட் சிறை மாஜி இராணுவ செய்திஇலாகாக்கள்.

ஏ. பி. ஷெட்டி

கால் நடை விவசாய நிதி, கல்வி, சட்டசபை, தேர்தல், ஷெட்யூல்ட் வகுப்பு ஷெட்யூல்ட் பிரதேச இலாகாக்கள்.

பி. பரமேஸ்வரன்

பிர்க்கா அபிவிருத்தி கதர், குடிசைத் தொழில், சின்கோனு, ஹரிஜன அபிவிருத்தி மதுவிலக்கு வன தபால், தந்தி, உள்ளூர் இலாகாக்கள்.

பெருமாள்சாமி ரெட்டி

தொழில் பிரிண்ட் கட்டுப்பாடு சுரங்கம். தாதுப் பொருள்கள், கம்பெனிகள் தொழில் அபிவிருத்தி பொது சுகாதார இலாக்காக்கள்.

ரோச்விக்டோரியா

உணவு மீன் ஸ்தல நிர்வாகம் கூட்டுறவு ஜாகை வசதி இலாகாக்கள்.

வானொலி

புதன் பிப்ரவரி 13—

[சென்னை]

காலை
7 00 ஆரம்பம்
7 15 தமிழில் செய்தி
7 30 ஏ. சுந்தரம் ஐயர்-வீணை
8 00 ஆங்கிலத்தில் செய்தி
8 15 ஒலிபரப்பு முடிவு

பகல்
12 30 நடுத்தரப்பள்ளிகளுக்கு
1 00 மாதர் நிகழ்ச்சி
1 30 கீதமஞ்சரி (ரிகார்டு)
1 40 ஹிந்தியில் செய்தி
1 50 ரிகார்டுகள்
2 00 தமிழில் செய்தி
2 10 கோட்டு வாத்யம்
2 15 உயர்தரப்பள்ளிகளுக்கு
2 45 ஒலிபரப்பு முடிவு

மாலை
4 00 ஆரம்பப்பள்ளிகளுக்கு
4 30 ஐரோப்பிய சங்கீதம்
5 00 ஒலிபரப்பு முடிவு
5 30 எஸ். பி. தின்கர்ராவ் பாட்டு
6 00 ஆங்கிலத்தில் செய்தி
6 10 அறிவிப்புகள்
6 20 ஹேமலதா பிரமலதா பாட்டு
7 00 திரை கானம்
7 15 தமிழில் செய்தி
7 30 ஐந்தரஸம்மேளனம்
7 45 மாகாண முன்னேற்றம் பேச்சு

இரவு
8 00 ரிகார்டு
8 15 டி. வி. ரத்னம் பாட்டு
9 00 ஆங்கிலத்தில் செய்தி
9 15 ஆங்கிலத்தில் பேச்சு
9 30 டி. பெருமாள் நாயுடு கிளாரினெட்
10 00 ரிகார்டு
10 30 ஒலிபரப்பு முடிவு

(திருச்சி)

காலை
7-10 கீதாரம்பம்
7-15 தமிழில் செய்தி
7-30 மாயூரம் எஸ். எஸ். வடிவாம்பாள்-பாட்டு
8-00 ஆங்கிலத்தில் செய்தி
8-15 சித்ரகானம் (ரிக்கார்டு)
8-30 ஒலிபரப்பு முடிவு

பகல்
12-30 நடுத்தரப்பள்ளிகளுக்கு
1-00 கதம்பம் (ரிககார்டு)
1-40 ஹிந்தியில் செய்தி
1-50 ரிக்கார்டுகள்
2-00 தமிழில் செய்தி
2-15 உயர்தரப் பள்ளிகளுக்கு
2-45 ஒலிப்பரப்பு முடிவு

மாலை
4-00 ஆரம்பப்பள்ளிகளுக்கு
4-30 ஒலிபரப்பு முடிவு
5-30 எஸ். வைகுண்டம் ஐயர் [illegible]
5-45 [illegible]
6-05 அறிவிப்புகள்
6-10 நீங்கள் கேட்டவை (ரிக்கார்டு)
6-30 கிராம நிகழ்ச்சிகள்
7-15 தமில் செய்தி
7-30 இசைச் செல்வம்
7-45 மதராஸில் உள்ளபடி

இரவு
8-00 வாழத்தெரிந்தவர் (நாடகம்)
8-16 எஸ். வைகுண்டம் ஐயர் -பீடில்
8-30 குரல்வசை (ரிகார்டு)
9-00 ஆங்கிலத்தில் செய்தி
9-15 மாயூரம் எஸ். எஸ் வடிவாம்பாள்-பாட்டு
10-00 ஒலிபரப்பு முடிவு